ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம்பெற்ற மாதஇதழ்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022
முதுகலைத் தமிழ்த்துறை
சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

சிறப்பிதழ் ஆசிரியர்
Special Issues Editor
முனைவர் தே.ராஜசீலி

சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்
Special Co-Editors
முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்
துறைத்தலைவர்
முனைவர் வே.புளோரா பவுலின் மேரி
முனைவர் செள. ஜான்சிராணி
திருமதி லூ.சவரியம்மாள்

ISSN: 2394-7535

**நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**

**பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்றது**

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022

முதுகலைத் தமிழ்த்துறை

சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

**சிறப்பிதழ் ஆசிரியர்**

**Special Issues Editor**

முனைவர் தே.ராஜசீலி

**சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்**

**Special Co - Editors**

முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்,
துறைத்தலைவர்
முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,
முனைவர் செள.ஜான்சிராணி,
திருமதி லூ.சவரியம்மாள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Ilakkiyangalil Iyarkai**

Special Issues Editor: **Dr.D.Rajaseeli**

Special Co-Editors: **Dr.G. Francis Catherin**, Head of the Department

**Dr.V.Flora Pauline Mary,**

**Dr.S.Jhansi Rani,**

**Mrs.L.Savariammal**

First Edition: January, 2023

Copyright: Publisher

No. of pages: 836

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 050.
Tamilnadu State, India.
Email : info@ncbh.in
Online : www.ncbhpublisher.in

**₹ 2300/-**

**Branches**

**Ambattur** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322-227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**இலக்கியங்களில் இயற்கை**

சிறப்பிதழ் ஆசிரியர்

**முனைவர் தே.ராஜசீலி**

சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்

**முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின், துறைத்தலைவர்**

**முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,**

**முனைவர் சௌ.ஜான்சிராணி,**

**திருமதி லூ.சவரியம்மாள்**

முதல் பதிப்பு: ஜனவரி, 2023

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,**
16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14
☎: 044 - 28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

(தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரால் நான்காம் சுற்றில் முதல் தர 'A+' நிர்ணயம் பெற்றது)
DST FIST Supported College
(கொடைக்கானல் அன்னைதெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றது)
பெரியகுளம் - 625 601, தேனிமாவட்டம்.

முதுகலைத் தமிழ்த் துறை மற்றும்
நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
(ISSN : 2394 - 7535, UGC Care Listed)

இணைந்து நடத்தும்
இணையவழி (Google Meet)
பன்னாட்டுக் கருத்தரங்கம்

# இலக்கியங்களில் இயற்கை

## நாள்: 19.12.2022

133. தெருக்கூத்துப் பாணிகளும் நிலப்பாகுபாடு வருணனைகளும் [illegible]
மா.சங்கர் & முனைவர் த.அண்ணாதுரை

134. பெரும்பாணாற்றுப்படை காட்டும், இயற்கை விருந்தோம்பல் [illegible]
கி.முருகன் & முனைவர் ஏ.வீரப்பன்

135. இலக்கியங்களில் களிறும் பிடியும் [illegible]
பத்மாஸ்ரீதர் & முனைவர் ச.உமா

136. ராஜவனம் புதினத்தின்வழிகுறிஞ்சி நிலவருணனைகளும் சூழலியல் விழுமியங்களும் [illegible]
திருமதி க.சத்யஜோதி & முனைவர் ஜெ.நிர்மலாதேவி

137. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை மற்றும் முக்கூடற்பள்ளு இலக்கியங்களில் இயற்கை [illegible]
க.ஆறுமுகம் & முனைவர் N.லெனின் & Co Guide முனைவர் தே.வெற்றிச் செல்வன்

138. பாவாணரின் இலக்கியங்களில் இயற்கை 700
ப.ரதிதேவி & முனைவர் மு.கவிதா

139. சங்க இலக்கியம் குறிப்பிடும் உழவுமுறைகளும் உணவுப்பயிர்களும் 705
சி.விஜயன் & முனைவர் ம.செந்தில் குமார்

140. ஐங்குறுநூற்றில் மரங்கள் 711
போ.சித்ராதேவி

141. முருகவேள் புதினத்தில் மார்க்சிய சூழலியல் ஓர் ஆய்வு 715
இ.கலைக்கோவன் & முனைவர் லி.ராம்ராஜ்

142. பாரியும் பறம்பு மலையும் 720
ச.ராமதிலகம் & முனைவர் செ.ரெஜினா

143. பாரதிதாசன் பாடுபொருளில் இயற்கை 724
முனைவர் மா.தே.அருண்மொழி நங்கை

144. தாவர சங்கமத்தில் சங்கமித்த தமிழர்கள் 729
முனைவர் வ.ஆன்றனி பிரகாஷ் பபிலா

145. கானகன் புதினம் காட்டும் சூழலியல் 733
ஆ.தீபிகா & முனைவர் ச.பிரியதஷிர்னி

146. சங்க இலக்கியங்களுள் நெய்தல் தாவரங்கள் 738
முனைவர் சி.ஆன்சிமோள்

147. சங்க இலக்கியங்களில் நதிகளும், தமிழ்ச் சமுதாயமும் 742
முனைவர் வெ.நிர்மலா

148. ஔவையாரின் நல்வழி உணர்த்தும் இயற்கை 746
முனைவர் ஜெ.இராஜ சொர்ணம்

149. முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழில் இயற்கைப் புனைவு 751
வி.செல்வி

150. சங்கப்பாடல்களில் இயற்கை 756
முனைவர் ப.சாந்தி

151. சங்க இலக்கியங்களில் காணலாகும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகள் 759
முனைவர் மா.ஜாஸ்மின்பிரியா

# 146. சங்க இலக்கியங்களுள் நெய்தல் தாவரங்கள்

முனைவர் சி. ஆன்சிமோள்
தமிழ்த்துறைத் தலைவர், (சுயநிதி)
ஹோலிகிராஸ் கல்லூரி
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

நிலைத்திணைஎன்பதுமரம்,செடி,கொடி,புற்கள் போன்றவற்றைக் குறிக்கும் ஒருபெரும் உயிரினப் பிரிவாகும்.
இதனைத் தாவரம் என்றுஅழைக்கின்றோம். இவ்வகைஉயிரினங்கள் ஓரிடத்திலிருந்துமற்றோர் இடத்திற்குத்
தாவேநகராமல் இருப்பதால் இதனை நிலத்திணை என்பர். சங்ககாலமக்கள் இயற்கையோடு இரண்டறக்
கலந்துவாழ்ந்தனர். தமிழரின் ஐவகைநிலங்களில் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் திணைக்குரிய மலர்களாக
நெய்தல்,அடம்ப,புன்னை,ஞாழல், தாழை ஆகியவையாகும். இம்மலர்களின் சிறப்புகள் இயற்கையின் அழகு,
இயல்பு கூறுகளையும் நுணுக்கமாக ஆராயும்விதமாக இவ்வாய்வில் வெளிப்படுத்துவதே நோக்கமாகும்.

**முன்னுரை**

சங்ககால மக்கள் தங்கள் வாழ்க்கை தளங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பாகுபாடு செய்து கொண்டு அந்தந்த நிலங்களின் பின் புலங்களுக்குத் தக்கவாறு தங்களது வாழ்க்கை முறைகளையும் தொழில்களையும் அமைத்துக் கொண்டுவாழ்ந்தனர். கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தல் திணையாகும் இந்நிலதிலுள்ள தாவரங்களின் தன்னையும், சிறப்புகளையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நிலவாழ்த் தாவரங்கள்**

தாவரம் என்பது இடம்விட்டு இடம் பெயராது நிலத்தன்மை கொண்டது, நிலத்திலோ, நீரிலோ வேர்விட்டு தண்டு, கிளை, இலைகளுடன் காணப்படும் என்று தமிழகராதி விளக்கம் அளிக்கிறது. நிலத்தாவரங்கள் கொடிவகை, மரம்வகை, செடிவகை, புதர்வகை, புல் வகை என ஐந்தாக பிரிக்கப்படுகின்றன. நெய்தல் நிலத் தாவரங்கள் கடற்கரையோரங்கள் உப்பங்கழிகளில் மிகுதியாக மலருகின்றன.

**நெய்தல் பூ**

நெய்தல் பூ கடற்கரை ஒரங்களில் மிகுதியாக மலரும் மலராகும். இதனை நன்னீர் மலர், உவர்நீர் மலர் என இருவகைப்படும். நன்னீர் மலரை நீர்நிலைமலர், வயல்வெளி மலர் எனப் பகுப்பர்.

"நீள் நறுநெய்தல்" என்று குறிஞ்சிப்பாட்டு நன்னீர் மலரினை குறிப்பிடுகிறது.

"மணிக்குலைக் கள் கமழ் நெய்தல்". என்று வயல்வெளி மலரை குறிப்பிடுகிறது.

இம்மலர் பெரும்பாலும் கடற்கரைக் கழிகளில் வளரும் தாவரம். இம்மலர் கண்ணுக்கு உவமையாகக் காட்டப்படுகிறது. வைகறையில் மலரும் புல்லிய அலங்கு இதழ்களைக் கொண்டது. உப்பங்கழியில், நெல் வயலில் பூக்கும். நறுமணம் கொண்டது. தேன் மிகுந்தருக்கும் இம்மலர் பூத்திருக்கும் பகுதியை 'நெய்தல் படப்பை' என்பர் இதனை நாரை உண்பது எருமை மேய்வது உண்டு. மாலையில் இம்மலர் கூம்பும் எனவும் புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

"சிறுபாசடையசெப்பு ஊர் நெய்தல்
தெண்ணீர்மலரின்" (நற்றிணை 23: 7-8)

"கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்
சிறுமாண் நெய்தல் ஆம்பலொடுகட்கம்" (புறநானூறு 61: 1-2)

"மைபடுமலர்க்கழிமலர்ந்தநெய்தல்" (பதிற்றுப்பத்;து 64:16)

"நீர்ச் செறுவின் நீள் நெய்தல்
பூச்சாம்பும் புலத்துஆங்கண்" (பட்டினப்பாலை 11-12)

"கள் கமழும் நறுநெய்தல்" (மதுரைக்காஞ்சி 250)

"வாழைவள்ளிநீள் நறுநெய்தல்" (குறிஞ்சிப்பாட்டு 79)

போன்ற பாடல்களில் மூலம் நெய்தல் பூவின் சிறப்புகளை காணமுடிகிறது.

**புன்னை**

ஐந்திணைக் கருப்பொருளைக் கூறவந்த இறையனார் அகப்பொருள் நூல், நெய்தல் திணைக்கு மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும் என்று குறிப்பிடுகின்றது. புன்னையைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் நூற்றுக்கணக்கான பாடல்களில் காணப்படுகின்றன. பத்துப்பாட்டில் ஒருசில பாடல்களில் 'நாகம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'சுரபுன்னை'என்று உரை கூறியுள்ளார். மலைபடுகடாமில் "நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்" என்ற அடியில் வரும் 'நாகம்' என்பதற்குப் 'புன்னைப்பூ' என்று உரை எழுதியுள்ளார். ஆகவே 'நாகம்' என்ற சொல் புன்னை மரத்தை குறிப்பிடுகிறது. 'புன்னை' என்பது ஒரு சிறுமரம் நெய்தல் நிலத்து மரமாகப் பெரிதும் பேசப்படுகின்றது.

..............................புன்னையோடு
ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்" (ஐங்குறுநூறு 103: 1-2)

"பெருங்கடற் கரையாதுசிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைதங்கும்" (ஐங்குறுநூறு 161)

"கரையனபுன்னையும்" (பரிபாடல் 11:17)

இம்மரத்தின் கிளைகள் மேற்கு நோக்கி வளைந்து வளரும் என்பதை புலவர்கள் ஊற்று அறிந்திருக்கின்றனர் இதனை

"புன்னைபூத்த இன்நிழல் உயர்கரைப்
பாடு இமிழ் பனிக்கடல் துழை
மேக்குயர்சினையின் மீமிசைக் குடம்பை" (நற்றிணை. 91: 2-6)

புன்னை மரம் கரும்பு நிறமாகவும் நீல நிறமாகவும் இருந்ததை,

"கருங் கோட்டுப் புன்னை"- (நற்றிணை 67:5)

"நீல்நிறப் புன்னை" (நற்றிணை 4:2:168:8)

"எல்லிஅன்ன இருள் நிறப்புன்னை" (நற்றிணை 354:5)

என்ற பாடல்கள் மூலம் புன்னைமரம் குறித்து செய்திகளை அறியமுடிகிறது.

**ஞாழல் பூ**

சங்க இலக்கியங்கள் ஞாழலை ஒரு சிறு மரமாக சித்தரிக்கின்றன. இதன் தாவரப் பெயர்காசியா சொபீரா என்று குறிப்பிடுகின்றது. இதன் பூ மிகச் சிறியது மஞ்சள் சிறமானது. நறுமணமுள்ளது. காமன் இளவல் சாமவேள் நிறத்தை ஒத்தது என்கிறார். நல்லத்துவனார். இதன் தளைகள் பசுமையானவை இவற்றை இளமகளிர் தழையாடையாக உடுப்பர். இதனை குமரி ஞாழல் என்றார். சேந்தங் கண்ணனார். இளங்கோவடிகள் இதனைக் கன்னி நறுஞாழல் என்று கூறுகின்றார். இறையனார் அகப்பொருள் இதனைப் 'பாவை ஞாழல்' என்றுரைக்கின்றார்.

"................... தழையோர்
கொய்குழைஅரும்பியகுமரிஞாழல் (நற்றிணை 54: 9-10)

"பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு" (இறை. அகப். நூ.பா. உரை)

ஞாழல் நெய்தல் நிலத்துக் கடற்கரையில் மணற்பாங்கில் நீர் ஒடுகின்ற இடத்தில் நிழல் பரப்பித் தழைத்து வளரும் என்றும் இதன் முதிர்ந்த பூங்கொத்தைத் தலைமுடியில் கமழ முடிப்பர் என்றும் புலவர்கள் கூறுகின்றனர்.

"கெய்குழைஅரும்பியகுமரிஞாழல்
தென்திரைமணிப்புறம் தைவரும்" (நற்றிணை54: 10-11)

"எக்கர்ஞாழல் செருந்தியொடுகமழ" (ஐங்குறுநூறு141)

"ஊர்க்கால் நிவந்தபெரதும்பருன் நீர்க்கால்
கொழுநிழல் முதிர் இணர்கொண்டு
கழுமமுடித்து................................" (கலித்தொகை 56: 1-3)

என்ற பாடல்களில் மூலம் ஞாழல் சிறுமரம் எனத் தெரிந்துகொள்ளமுடிகிறது.

ஞாழல் பூ செவ்விய நிறமுடையது. பொன்னிறம் காட்டுவது நறுமணம் உடையது. தினையரிசியைப் போன்றது. ஆரல் மீனின் முட்டைகளை ஒத்தது. அம்முட்டைகள் தொகுப்பாக உள்ளது போல் ஞாழல் மலர்க் கொத்தும் இருக்கும் என்பதை.

"நறுவீஞாழல்" (குறுந்தொகை318:2)
"பொன்வீஞாழல்" (அகநானூறு 70:9)
"செவ்வீஞாழல்" (அகநானூறு 240:1)
"சிறுவீஞாழல்" (நற்றிணை315:6)
"ஐனவின்னசிறு பூ ஞாழல்" (குறுந்தொகை50:1)
"ந்னைமுதிலீஞாழல் தினைமருள் திரள்வீ" (குறுந்தொகை 397:1)

பாடல் வழி அறிய முடிகிறது.

### அடப்பம் பூ

சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் அம்பு என்பது கடற்கரை மணலில் வளரும் அடப்பங் கொடியாகும் இதன் செந்நில மலர் மிகவும் அழகானது. ஆட்டுக்காலின் குளம்படி இருபிளவாக பிளந்திருப்பதால் ஆட்டுக்கால் அடம்பு என்றும் வழங்குவர். அடம்பு மலர் மருத்துவ மூலிகையாக பயன்படுத்தப்படுகின்றது. மூட்டுவலி, வயிற்றுப் போக்கை நிறுத்தக் கூடியது.

"அடும்புஅமர்ஆத்திநெடுங்கொடிஅவரை" (குறுந்தொகை 87)

என்று கபிலர் கூறும் அடும்பு ஒரு கொடியாகும் இதற்கு நச்சினார்க்கினியர்" அடும்பம் பூ" எனவும்

"அடும்பிவர்அணிஎக்கர்" (கலித்தொகை 132:16)

"ஆடம்பின் ஆய்மலர்விரைகுநெய்தல்
நெடுந்தொடைவேய்ந்தநீர்வார் கூந்தல்
ஓரைமகளிர்" (குறுந்தொகை 400: 1-3)

என்ற பாடல் வரிகளில் மூலம் அடம்பு பூ பற்றிய செய்திகள் அறிய முடிகிறது.

### தாழை

கடற்கரைப் பகுதிகளிலும் மணற்பரப்புகளிலும் நீர் நிலைகளில் இயற்கையாக வளர்ந்து மணம் பரப்பும் பூ தாழையாகும. பாண்டேசி எனும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. ஒருவித்திலைத் தாவரம். இதன் இலையில் முள் இருக்கும். இதன் அடிமரத்தில் விழுதுகள் காணப்படும். இதுமடலாகப் பூக்கும் இதன் பூவில் ஆண்,பெண் வேறுபாடு உள்ளது. வேளிறிய மஞ்சள் நிறத்தில் இருக்கு இப்பூ ஓரேநாளில் கீழே விழுந்துவிடும் ஆண் மலர் காய் காய்ப்பதில்லை. பெண் வகையில் பூ காயும் அன்னாசிப்பழம் போன்று காணப்படும்.

தலைவிரித்த பேய் போல் தாழையின் பச்சை மடல்கள் பரவி விரிந்துள்ளதாக அகநானூற்றில் வெங்கண்ணனார் கூறுகிறார்.

"அவைநீர்தாழைஅன்னம் பூப்பவும்" (சிறுபாணாற்றுப்படைடு 146)

"சுறவுகோட்டுஅன்ன முள் இலை
தூழைபெரும்களிற்றுமருப்பின்
அன்னஅரும்புமுதர்பு (நற்றிணை19: 2-3)

"வேழம் நிரைத்துவெண் கோடுவிரைஇ
தாழைமுடித்துதருப்பைவேய்ந்த
குறி இறைகுரம்பை" (பெரும்பாணாற்றுப்படை. 263-265)

"தாழ்தாழைதண் தண்டலை" (பொருநராற்றுப்படைடு 181)

"வெள்வீதாழைதிலைஅலை (குறுந்தொகை 163:4)

"நிலவுகானல் முழவுதாழை
குளிர்பொதும்பர்நனி தூவல்" (மதுரைக்காஞ்சி 114-115)

"கமழும் தாழைகானல் அம்பெரமுதுறை" (பதிற்றுபத்து 55-5)

"தாழைமணந்துஞாழலொடுகொழிஇ" (அகநானூறு 180-12)

மணிமிக்கதாழம்பூ கிருமி நாசினியாகவும் அம்மைநோய் கண்டவீட்டில் தாழம் பூவைக் கட்டித்தொங்க விடுவதால் அக்கிருமிகள் அழிகின்றன. ஓலைச் சுவடிகளை பூச்சி அரிக்காமல் பாதுகாக்கவும் இப்பூ பயன்படுகிறது. தாழையின் மகரந்தத்தூளை திருநேஎன்பர். இப்போது இப்பூ கடற்கரையில் ஒருசில இடங்களில் மட்டுமே காணப்படுகிறது.

**முடிவுரை**

தமிழரின் ஐவகை நிலங்களில் கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் திணைக்குரிய மலர்களாக நெய்தல், புன்னை, அடம்பு, ஞாழல், தாழை போன்றவற்றின் சிறப்புக்கள் அடம்பு, ஞாழல், தாழை போன்றவற்றின் சிறப்புக்களை தன்மைகள், இயல்புகள் இவற்றை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

**தொகுப்புரை**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியின் கூற்றுக்கு இணங்க தமிழ் மொழியில் இயற்கையின் கருப்பொருட்களான மரம், செடி, கொடி பூக்கள் என தாவரங்களையும் புலவர்கள் பாடியுள்ளனர். நெய்தல் திணை பூக்களாக நெய்தல் பூ, புன்னை, அடம்பு, சிறப்பியல்புகள், பயன்கள் முக்கியத்துவம் முதலியவற்றை மேலே கூறிய கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது.

**துணைநூற்கள்**


1. நற்றிணை - திரு.பெ.வே. சோமசுந்தனார் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 522,டி.டி. கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.
2. கலித்தொகை - திரு.பெ.வே. சோமசுந்தனார் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522,டி.டி. கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18.
3. அகநானூறு - புலியூர்க் கேசிகன்பாரிநிலையம், 90,பிராட்வே - சென்னை- 18.
4. பதிற்றுப்பத்து - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 522,டி.டி.கே. சாலை, அழ்வார்பேட்டை, சென்னை- 18.
5. பத்துப்பாட்டு - திரு.பொ.வே. சோமசுந்தரனார் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பிரகாசம் சாலை, சென்னை - 1.